நகைகளைச் செய்ய முடியும். அதற்காக லைசன்ஸ் வாங்கவேண்டும். லைசன்ஸ் வாங்குவதற்கான கட்டணம் ஒரு ரூபாய். இப்படி யெல்லாம் குறிப்பிட்டு விதிகள் வந்திருக்கின்றன.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]

II—ADJOURNMENT MOTIONS.

(1) ARREST OF D.M.K. VOLUNTEERS AND FAILURE TO PROTECT D.M.K. COUNCILLORS OF MADRAS CORPORATION.

11-30 a.m.

(2) FAILURE TO PROTECT POLITICAL LEADERS IN MADRAS CITY AGAINST ROWDY ELEMENTS.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்தி வைப்புப் பிரேரணையைத் தங்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். அதற்கான. . .

திரு. மீ. கலியாணசுந்தரம் : சபையின் முன் உள்ள விஷயம் என்ன என்று தெரியவில்லையே.

கனம் சபாநாயகர் : அதைக் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எது சம்பந்தமாக ஒத்திவைப்புப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தால் நல்லது.

கனம் சபாநாயகர் : கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதையும் சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைத் தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதைக் கொண்டுவருவதற்கான காரணம், இப்பொழுது சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையிலும் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையைப் பற்றிய ஒன்றாகும். இப்பொழுது நடைபெற்று முடிந்த மாநகர மன்றத் தேர்தலைப் பொறுத்து, எங்கு பார்த்தாலும் பீதி அடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நிரபராதிகளும் தேர்தலிலே பங்குபெற்ற பலரும் காரண காரியமில்லாமல் கைது செய்யப் படவும், காவலில் வைக்கப்படவும் ஆன சூழ்நிலை ஆங்காங்கு ஏற்பட்டுள்ளது. தேர்தலைப் பொறுத்துக் காவல் துறையினர் தக்க பாதுகாப்புகளையும் நல்ல ஒழுங்கை நிலைநாட்டும் முறைகளையும் ஏற்படுத்தியிருந்தார்கள் என்பதை நான் ஒப்புக் கொண்டாலும், இந்தத் தேர்தலில் ஈடுபட்ட சில எலெக்ஷன் ஏஜெண்ட்களும் காரணமில்லாமல் கைது செய்யப்பட்டார்கள். போலிங் பூத் ஏஜெண்ட்களும் கைது செய்யப்பட்டுக் காவலில், தேர்தல் அன்றே, வைக்கப்பட்டார்கள். சில இடங்களில், குறிப்பாக மயிலாப்பூர் தொகுதியில் திரு. கோவிந்தசாமி என்பவர் தேர்தல் வேட்பாளராக நின்றும், தொகுதியில் சுற்ற முடியாத

அளவுக்கு அவர் பீதியோடு தங்கும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகும் பல்வேறு இடங்களில் பலர் கைது செய்யப்படவும் காரணம் சொல்லப்படாமல் அவர்கள் காவலில் வைக்கப்படவும் ஆன நிலைமை இன்னும் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. மூன்று, நான்கு நாட்களாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தாக்கப்படு கிறவர்கள் பலபேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தாக்கின வர்கள் பலபேர் தாராளமாக விடப்பட்டிருக்கிறார்கள். குறிப் பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொண்டர் களும் தேர்தலில் பணியாற்றிய பலரும் இந்தப் பழிக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. பல முறை போலீஸ் அதிகாரிகளுக்கு இதுபற்றி எடுத்துச் சொல்லியும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமை யினால் பீதி நிலைமை ஆங்காங்கு நிலவிக் கொண்டிருக்கிறது. வெற்றி பெற்ற உறுப்பினர் நடமாட முடியாத சூழ்நிலை பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. இங்கே விவாதிப்பதன் மூலமாகக் காவல் துறையினர் சீராக நடப்பதற்கும், ஒழுங்கு, அமைதி நிலைநாட்டப்படுவதற்கும் வழிவகை ஏற்படக்கூடும். இங்கே விவாதிப்பதன் மூலமாகக் கூறப்படும் கருத்துக்கள் அதற்குத் துணை செய்யக்கூடும். அமைதியை நிலைநாட்டவும், அதே நேரத்தில் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படாத அளவுக்கு கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், வேட்பாளர்கள் ஆகியவர் களுடைய உரிமை காப்பாற்றப்படவும் இந்த விவாதம் உதவி செய்யும் என்ற முறையிலே இந்த ஒத்திவைப்பு பிரேரணையை நான் கொண்டுவருகிறேன். தாங்கள் அதற்கு அனுமதி அளித்து, விவாதித்து, நல்ல சூழ்நிலை ஏற்படத் துணை புரியுமாறு தங்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : The adjournment motion given notice of by the hon. Member Sri M. Kalyanasundaram also relates to the same subject. It refers to the failure of the Police Administration to secure protection for the security of political leaders in the City of Madras against the attack of rowdy elements. I think, this is also connected with . . . .

திரு. மீ. கலியாணசுந்தரம் : இரண்டும் பார்த்தால் ஒரே மாதிரி யாயிருக்கும். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கோருவது வேறாக இருக்கலாம். நான் பொதுவாக, பாரபட்சம் இல்லாமல் தான் என்னுடைய ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்து இருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதிலும் உண்மை இருக்கலாம். அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மறுக்கக்கூடும். ஆனால், என்னிடம் இருக்கும் தகவலை வைத்து நான் பேசுகின்றேன். என்னுடைய கட்சியைச் சார்ந்த கிளைக் காரியதரிசிகளைக்கூட போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று, வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. கோவிந்தன் முன்னிலையில், நிர்ப்பந்தப் படுத்தி, இழிவுபடுத்திய சம்பவங்கள் பல இருக்கின்றன. அதே

போன்று ஒரு தொகுதியில் தோல்வியடைந்த அபேட்சகர் ஒருவர் கல்லால் அடிக்கப்பட்டு, தாக்கப்பட்டிருக்கிறார். நான் 'ரௌடி எலிமென்ட்ஸ்' என்றுதான் நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். சில தினங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொல்கிறேன். திரு. கண்ணதாசன் அவர்களும், திரு. சம்பத் அவர்களும் காரிலே ஏறுகிறபோது சுற்றி வளைத்துக்கொண்டு, உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் என்னுடைய கட்சியைச் சார்ந்த சிலரும், தமிழ்த் தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களில் சிலரும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களில்கூட சிலர் ரௌடிகளால் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன். யாராயிருந்தாலும், அரசியல் விருப்பு வெறுப்புக்களை வைத்துக்கொண்டு ரௌடித்தனத்தில் இறங்குவது சரியல்ல என்பது என்னுடைய கருத்து; அதில் இரண்டுவிதக் கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால், சென்னை நகரத்தில் இப்படி விசேஷ சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை உடனடியாகத் தடுக்காவிட்டால் இத்தகைய நிலைமைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கும். இதைக் குறைப்பதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். போலீசார்களிடத்திலேயே அரசியல் ஊடுருவல் இருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே முதல் அமைச்சர் அவர்களும், போலீஸ் அமைச்சர் அவர்களும் உடனடியாக இதுபற்றி நடவடிக்கை எடுத்து ரௌடி எலிமெண்ட்ஸைக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு அவசரப் பிரேரணையை கொடுத்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஒரு அவசரப் பிரேரணை கொடுத்திருக்கிறார். பார்வையில் இவை ஒன்றுபோல இருந்தாலும் கருத்தில் வேற்றுமை இருக்கிறது என்பதை கனம் கலியாணசுந்தரம் அவர்களே சுட்டிக் காட்டினார்கள். அதை நானும் உணர்கிறேன். இருந்தாலும் அவை இரண்டுக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. இந்த இரண்டுமே அவசரப் பிரேரணையாகக் கொண்டு வருவதற்கு உரியவை அல்ல. அது தான் அந்த ஒற்றுமை. (சிரிப்பு.) சென்ஷூர் மோஷன் ஆக இதைக் கொண்டு வந்திருக்கலாம். ஒத்திவைப்புத் தீர்மானமாக இதைக்கொண்டு வருவதற்கு இல்லை. நம்முடைய விதிப்படி the motion must be restricted to a specific matter of recent occurrence. இரண்டும் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியாக இருக்கலாம். Failure of Government to protect leaders என்பதாக இதில் ஒரு குறிப்பிட்ட சம்பவம் எதுவும் சொல்லப்படவில்லை. அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதும் பிரேரணையில் இல்லை. போலீசார் பலாத்காரமாக நடந்து கொள்கிறார்கள் என்று

27th February 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். இந்த விதியில் **the matter to be discussed must involve more than ordinary administration of law** என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதையும் மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

போலீசாரைப் பொருத்தமட்டில் இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்ற எண்ணம் இல்லையென்று நான் உறுதி கூறுகிறேன். அமைதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அவர்களுடையது. அமைதிக்கு பங்கம் விளைவிக்கக் கூடியவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். அப்படி தடுப்பு நடவடிக்கை எடுப்பது அவர்களுடைய பொறுப்பு ஆகும் அந்த வேலையை அவர்கள் சரிவரச் செய்து வருகிறார்கள் பலாத்கார நடவடிக்கைகளில் இறங்குகிறவர்கள் மீது அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். எந்தக் கட்சியை அவர்கள் சேர்ந்தவர்கள் என்பது போலீசாருக்குத் தெரியாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக வேண்டுமானாலும் இருக்கலாம். அமைதிக்கு பங்கம் விளைப்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதை மன்ற அங்கத்தினர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

எனக்குத் தெரியும். போலீசார் இருக்கிற நிலைமையை அவ்வப்போது என்னிடத்தில் வந்து எடுத்துக் கூறுகிறார்கள். தேர்தலுக்கு முன்புகூட சிலரை தடுப்பு நடவடிக்கை என்பதன்கீழ் கைது செய்தார்கள். அப்போது சட்டசபை உறுப்பினர்களே முன் வந்து, "அவர்கள் எங்கள் கட்சியின் தேர்தல் ஏஜெண்டுகள் என்று சொல்லுகிறார்களே" என போலீசார் வந்து கேட்ட போது "அப்படி சட்டசபை உறுப்பினர்களே வந்து சொன்னால் அவர்களுடைய உத்தரவாதத்தின்பேரில் அவர்களை விடுதலை செய்து விடுங்கள்" என்று சொன்னேன். அப்படியே வெளியில் விட்டார்கள். தேர்தல் அன்று அவர்கள் மறுபடியும் பலாத்காரத்தில் இறங்கவே, மறுபடியும் கைது செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. தேர்தலுக்கு முன்னும் சரி, பின்னும் சரி இப்படி அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய ரௌடி எலிமெண்ட்ஸ் இருக்கத்தான் செய்கிறது. அமைதியைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு போலீசாருக்கு இருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறபோது பலருக்கு வருத்தம் ஏற்படுகிறது. "இப்படி அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்களே" என்று கைது செய்யப்படுகிறவர்களுக்கும், அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் வருத்தம். அதே சமயம் தாக்கப்பட்ட கட்சியினருக்கு இன்னும் கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளமாட்டேன் என்கிறார்களே என்று வருத்தம்.

[திரு. எம். பக்தவத்சலம்] [27th February 1964

திரு. மி. கலியாணசுந்தரம் அவர்கள் பீச்சில் நடந்த சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவருடைய ஒத்திவைப்புப் பிரேரணையிலேயே அந்த வாசகம் வந்திருக்கிறது. போலீசார் என்ன செய்வார்கள்? "எங்கள் உயிருக்கு ஆபத்து வருகிறது, பாதுகாப்பு கொடுக்கவேண்டும்" என்று அவர்கள் கேட்டார்கள். "சரி எழுதிக் கொடுங்கள், அவ்வாறு" என்று சொன்னால் எழுதிக்கொடுத்தால்தானே அதன்பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளமுடியும். இதுவரை எழுதிக் கொடுக்கவில்லை என்று அறிகிறேன். போலீஸ்காரர்களுடன் ஒத்துழைத்தால் தான் அவர்களாலும் தங்கள் கடமையைச் சரிவர ஆற்ற முடியும்.

இரண்டு மூன்று புகார்கள் வந்தன, எனக்கும் தெரியும். அவற்றை விசாரிக்கும்போது அவற்றுக்கு ஆதாரமே இல்லாமல் போய்விட்டது. தேர்தலுக்கு அப்புறம் ஒரு நாள் இரவு 10 மணிக்கு டெலிபோன் வந்தது. "அடித்துவிட்டார்கள், உதைத்துவிட்டார்கள்" என்று அப்புறம் பன்னிரண்டு மணிக்கு வந்து சொன்னார்கள். அது உண்மைதான். அதை மறுக்கவில்லை. இரண்டுபேரும் பேசுகிறார்கள். பேச்சு தடிக்கிறது, அடிதடி வந்து விடுகிறது. தாக்கப்பட்டவர்கள் மட்டும் புகார் செய்யவில்லை. தாக்கினவர்களும் புகார் செய்கிறார்கள். இவர்கள் "இப்படி நடவடிக்கை எடுக்கிறீர்களே?" என்கிறார்கள். "இன்னும் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லையே" என்கிறார்கள் அவர்கள். அமைதியை நிலைநாட்டும் வகையில் எல்லா நடவடிக்கைகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு வருகிறது. இந்த அவசரப் பிரேரணைக்கு இடம் இல்லை. இது பொருத்தமும் இல்லை. வேண்டுமென்றால் சென்ஷூர் மேஷன் கொண்டு வரலாம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் கலியாணசுந்தரம் அவர்கள் கடற்கரை சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தக் காரிலேயே சென்றவர்கள் தாக்கப்பட்டார்கள். அதுபற்றியும் புகார் வந்திருக்கிறது. ஆகவே எல்லா உண்மைகளும் வெளிப்படுவதற்கு நான் குறிப்பிட்டபடி இந்த விவாதம் அவசியமானது. அதைத் தாங்கள் அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Regarding the adjournment motion of Sri V. R. Nedunchezhiyan, Leader of the Opposition, I have to state that the Leader of the Opposition alleges detention and arrest of D.M.K. volunteers before, during and after the elections to the Corporation of Madras. He also alleges that no protection has been given to elected councillors. If the volunteers are unlawfully detained, they can have recourse to the court of law. After hearing both sides I think this matter does not involve more than the ordinary administration of the law. Consent to the motion is, therefore, withheld.

Regarding the adjournment motion of Sri M. Kalyanasundaram, it is the same thing. . .

SRI M. KALYANASUNDARAM: One submission, Sir.

நான் சொல்லக்கூடிய சம்பவங்களைப் பற்றி--குறிப்பிட்டு ஒன்றைச் சொல்லவில்லை என்றாலும், போலீஸார் தம் கடமையில் இருந்து தவறி இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளேன். அதை திருத்தத்தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறேன். இது "something more than ordinary administration of law."

MR. SPEAKER: Regarding the adjournment motion given by the hon. Member Sri M. Kalyanasundaram, I have to say that if anybody attacks or attempts to attack anybody else and if the complaint is proved, action must be taken. According to the reports, some people have been arrested and the matter is pending before the Court. There is no clear evidence before the House now to show that there is any failure on the part of Government so specific as to attract the provisions of an adjournment motion. Consent to that motion also is therefore withheld.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே உங்களுடைய தீர்ப்புக்குத் தலை வணங்குகிறோம். ஆனால் ஆளும் கட்சிக்குச் சார்பாகவும் எதிர்க் கட்சிக்குப் பாதகமாகவும் ஆட்சியினர் காவல் துறையினரைப் பயன்படுத்தியதை உணருவதன் காரணமாக, ஆட்சியினருக்கு எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் வெளி நடப்பு செய்வதைத் தவிர வேறு வழி இல்லையென்பதால் வெளி நடப்பு செய்கிறோம் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

The Members belonging to the D.M.K. Party staged a walk-out.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாதிரி விஷயங்களை விவாதிப்பதன் மூலம்தான் உண்மையிலேயே நியாய அநியாயத்தை வரையறுக்க முடியும் என்று நம்புகிறவர்கள் நாங்கள். அந்த முறையிலே விவாதிப்பதற்கு வழி இல்லாமல், ஆளும் கட்சியினர் செய்வதைக் கண்டிக்கும் முகத்தான் நாங்களும் வெளியேறுகின்றோம்.

The Members belonging to the Swatantra Party also staged a walk-out.

(3) PREVENTION OF RECURRENCE OF CLASH IN URAPPANUR.

MR. SPEAKER: The hon. Member, Sri M. Kalyanasundaram, has given notice of an adjournment motion. May I know how the matter comes within the scope of an adjournment motion?

[27th February 1964

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற வருஷம் இதே சமயத்தில்தான் உரப்பனூரில் தகராறு ஏற்பட்டு போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இப்போதும் மீன் பிடிப்பு சம்பந்தமாகத் தகராறுகள் இருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, போன வருஷம் மாதிரி நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் இப்போதே தலையிட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இதுவும் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று நான் கூற விரும்புகிறேன். recent occurrence-ஆக இருக்க வேண்டும். ஆனால், இந்த விஷயம் ஒரு வருஷத்திற்கு முன்னால் நடந்தது. ஒன்றும் கவனிக்கவில்லை என்று சொல்லி ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவருவது கிடையாது. ஆனால், கனம் அங்கத்தினர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்—அரசாங்க அதிகாரிகள், கலெக்டர்கள் உட்பட இதிலே அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரு கட்சிகளுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சென்ற ஆண்டு நடந்த சம்பவத்தை வைத்து தற்போது பிரேரணை கொண்டு வந்திருப்பது ஒத்தி வைப்புப் பிரேரணையின்கீழ் வராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் இதை வற்புறுத்தவில்லை.

(4) Failure to supply adequate rice to Madras City.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion regarding the failure of the Government to take steps to make available adequate supply of rice to Madras City, resulting in sudden increase in cost of meals and other edibles in the City hotels.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை நகரத்தில் இருக்கும் பல உபத்திரவங்களில் முக்கியமான உபத்திரம் ஹோட்டல்களில் ஒரு சாப்பாட்டின் விலை ஏற்கனவே இருந்ததை விட 20 நயா பைசா, 30 நயா பைசா ஏறிவிட்டதாகும். சாப்பாட்டின் விலை அதிகமாகி விட்டதோடு தரமும் குறைந்து விட்டது. தற்போது ஹோட்டல்காரர்கள் விலையை ஏற்றிவிட்டார்கள். ஒரு சமயம் நாளைக்கு அரிசி விலை இறங்கினால் கூட ஹோட்டல்காரர்கள் விலையை இறக்கப் போவதில்லை. அரிசி தாராளமாகக் கிடைக்க வில்லை போன்ற பல காரணங்களைச் சொல்லி விலையை ஏற்றிவிட்டார்கள். இதனால் வெளியூரில் இருந்து வருகிற